Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™

கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர் (பொறுப்பு)
அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை: திரு.R.S. மாரியப்பன், பி.இ., எம்.பி.ஏ.,
திட்ட அனுமதி
நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 49-ன் கீழ்

ந.க.எண்.**4775/2015**/உ திரு-**1**

தி.அ.எண். **293/2019** நாள்: .12.2019

உள்ளாட்சியின் பெயர்: கோயம்புத்தூர் மாநகராட்சி (தெற்கு மண்டலம்)

பொருள் : திட்ட அனுமதி - மனைப்பிரிவு மலையிடப்பகுதி - கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமப்பகுதி - கோயம்புத்தூர் மாநகராட்சி - தெற்கு மண்டலம் - சுண்டக்காமுத்தூர் கிராமம் - க.ச.எண்.341-ல் **5.01 ஏக்கர்** பரப்பளவுள்ள இடத்தினை உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க திட்ட அனுமதி வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :

1. மனுதாரர் திரு. E. பழனிச்சாமி, திருப்பூர் அவர்களின் விண்ணப்பம் நாள். 28.06.2015
2. உதவி ஆணையாளர், தெற்கு மண்டலம், கோயம்புத்தூர் மாநகராட்சி கடிதம் ந.க. எண். 9454/2015 எச்-1(தெ), நாள் : 18.11.2015
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 5354/2017 எல்.ஏ2, நாள். 03.08.2017
4. 60 வது மலையிட பாதுகாப்பு குழும கூட்ட தீர்மானம் நாள். 07.07.2017 (பொருள் எண். 3)
5. முதன்மை தலைமை வனபாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்) பனகல் மாளிகை, சைதாப்பேட்டை, சென்னை அவர்களின் கடிதம் டூ.மு. எண். டிஎஸ். 4/30257/2015, நாள். 12.02.2015
6. தலைமைப் பொறியாளர் (வே.பொ) நந்தனம், சென்னை அவர்களின் கடிதம் எண். நபதி1/39147/2015 நாள். 16.10.2015
7. உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, கோயம்புத்தூர் அவர்கள் கடிதம் ந.க.எண். 864/2015 Mines, நாள். 23.09.2015
8. மாவட்ட ஆட்சித்தலைவர் கோயம்புத்தூர் மாவட்டம் அவர்களின் இட நேராய்வு குறிப்பு நாள் 01.09.2016
9. கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழும தீர்மானம் எண்.09 நாள் 15.09.2017
10. மனுதாரர் வளர்ச்சி கட்டணம் மற்றும் நன்னிலை கட்டணம் செலுத்திய கடிதம் பெறப்பட்ட நாள் 27.11.2019

*****

உத்திரவு:

கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும பகுதி, கோயம்புத்தூர் மாநகராட்சி, தெற்கு மண்டலம், சுண்டக்காமுத்தூர் கிராமம், க.ச.எண்.341 - பரப்பு **5.01 ஏக்கர்** பரப்புள்ள இடத்தினை

த்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு ம.வ/கோஉ திகு எண்.256/2019 என எண்ணிட்டு தொழில் நுட்ப அனுமதியும் திட்ட அனுமதி எண்.293/2019 என்ற எண்ணில் கீழ்க்கண்ட சிறப்பு நிபந்தனைகள் மற்றும் பொது நிபந்தனைகளின்படி திட்ட அனுமதியும் அளிக்கப்படுகிறது.

மனுதாரர் தேவையான உரிமங்களை மற்ற விதிகளின் கீழ் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியிடம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

சிறப்பு நிபந்தனை

1) நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்யஉரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறுயாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

2) நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களது சுற்றறிக்கையின்படி "உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய்த்துறை சர்வே எண் உட்பிரிவுகள் செய்து அதற்கான விபரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்".

3) The Tamil Nadu Government in G.O.Ms No. 112, Housing and Urban Development Department Dated. 22.06.2017 has approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The Promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or Part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority.

பொது நிபந்தனைகள்

1. இந்த திட்ட அனுமதியானது கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமத்திற்கு உட்பிரிவு 1 மற்றும் 2 பிரிவு 91-A நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 (சட்டம் 35 1972)ன் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டதாகும்.

பிரிவு 79 நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 (சட்டம் 35-1972)ன் படி எந்த நபராவது இந்த உத்திரவு அல்லது தீர்மானத்தினால் பிரிவு 49 அல்லது 64(1)ன் கீழ்மறுக்கப்பட்டிருப்பின் உத்திரவு அளிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதத்திற்குள் நகர் ஊரமைப்பு இயக்குநர்/அரசுக்கு மேல்முறையீடு செய்யலாம்.

3. கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழும உறுப்பினர் செயலர் திட்ட அனுமதி அளித்த பிறகு

(1) திட்டஅனுமதி பெற தவறான விபரம் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலோ,
(2) சட்டப்படி சரியான வழிமுறைகள் கடைபிடிக்கத் தவறியிருந்தாலோ, உறுப்பினர் செயலர் மேற்கண்ட காரணத்தின் அடிப்படையில் திட்ட அனுமதியினை மாற்றவோ ரத்து செய்யவோ உரிமையுண்டு.

4. தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் கண்டுள்ள நிபந்தனைகள் நிறைவேற்றப்படவேண்டும்.

5. வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டுக்கு மாறாகவும் கூடுதலாகவும் மனைப்பிரிவு அபிவிருத்திக்கு வரிவிதிக்கப்படின், அத்தகைய மீறல்களுக்கு சம்பந்தப்பட்ட உள்ளாட்சியே (**கோயம்புத்தூர் மாநகராட்சி** உட்பட) பொறுப்பாகும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

6. உள்ளாட்சி சட்டத்தின்படி வரிவிதிக்கப்படுவதற்கு முன்னர் வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டுக்கு மாறாகவும், கூடுதலாகவும் மனைப்பிரிவு அபிவிருத்திக்கு இவ்வலுவலகத்தால் வழங்கப்பட்ட அதிகார பகிர்வின்படி நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 56 மற்றும் 57 ன்படி நடவடிக்கை ஏதுவாக எடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

7. **திட்டஅனுமதி வழங்கப்பட்ட வரைபடத்தின் நகலினை மனையிடத்தின் முன்புறத்தில் எந்நேரமும் பார்க்கத்தக்க வகையில் காட்சிக்கு (Display) வைக்கப்படவேண்டும்.**

உறுப்பினர் செயலர் (பொறுப்பு)
கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம்,
கோயம்புத்தூர் - 12.

இணைப்பு

முத்திரையிட்ட வரைபடம் - 2
நிபந்தனை படிவம் - 2

பெறுநர்

ஆணையாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
டவுன்ஹால்,
கோயம்புத்தூர் - 641001

நகல்: மனுதாரர் (உள்ளாட்சி மூலமாக)

திரு. E. பழனிச்சாமி, C/o R. மூர்த்தி,
1, R.G அவென்யூ சுகம் ரெஸிடென்ஸி தொடர்ச்சி,
அம்மாபாளையம் அஞ்சல்,
திருப்பூர் - 641 652

கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை: திரு. J. ஷ்ரவன் குமார், இ.ஆ.ப.,

ந.க.எண்.04487/2019/ எச்1/தெ/எம்.எச்4(தெ)
அனுமதி எண்.12/2020/எம்.எச்.4(தெ) **நாள். .02.2020.**

பொருள்:- மனைப்பிரிவு அனுமதி – கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம் – சுண்டக்காமுத்தூர் கிராமம் – க.ச.எண். 341 ல் 5.01 ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் மற்றும் திட்ட அனுமதி மனைப்பிரிவு அனுமதி வழங்குதல் தொடர்பாக.

பார்வை:-
1. உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக் குழுமம் கோயம்புத்தூர் அவர்களின் திட்ட அனுமதி ந.க.எண்.4775/2015/உ.திரு-1, திட்ட அனுமதி எண்.293/2019, நாள்.26.12.2019.
2. ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்.21.02.2020.

உத்திரவு:-

கோயம்புத்தூர் மாநகராட்சி, தெற்கு மண்டலம், சுண்டக்காமுத்தூர் கிராமம், க.ச.எண். **341–ல் 5.01** ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு **ம.வ/கோஉ.திரு எண்.256/2019** என எண்ணிட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டதினை தொடர்ந்து பார்வை 1–ல் கண்ட உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக் குழுமம் கோயம்புத்தூர் அவர்களின் திட்ட அனுமதியின் படியும், பார்வை 2–ல் காணும் ஆணையாளர் அவர்களின் உத்திரவின்படியும் மனைப்பிரிவு அனுமதி அளிக்கப்படுகிறது.

இணைப்பு:-
மனைப்பிரிவு வரைபடம்.

ஆணையாளருக்காக,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

பெறுநர்:-

திரு. E. பழனிச்சாமி, C/o. R. மூர்த்தி,
1, R.G அவென்யூ, சுகம் ரெஸிடென்ஸி தொடர்ச்சி,
அம்மாபாளையம் அஞ்சல்,
திருப்பூர் – 641 652.



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.

empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate